சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 19.04.2022 supeedsam.com supeedsam@gmail.com







## மக்களின் கோபம் எனக்கு தெரிகிறது

# சர்வதேச நாணயநிதியத்தை நாடாதமை இரசாயன உரம் வழங்காதமை தவறு



## நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் வரலாற்றில் மிகவும் கடினமான அதே போன்று, சவாலான பொருளாதார பீதியாக, அரசியல் ரீதியாக, சமூக பீதியாக நாடு தீர்மானமிக்கதொரு தருணத்தை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்திலேயே இன்று நான் உங்களிடம் உரையாற்றுகிறேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் இன்று ஆற்றிய விசேட உரையிலேயே இவ்விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று சிரேஷ்ட நிலை பாராமல் புதிய அமைச்சர்களை நியமித்துள்ளேன். அமைச்சர் பதவி என்பது ஒரு வரப்பிரசாதம் அல்ல. அது ஒரு பாரிய பொறுப்பு ஆகும். அமைச்சர் என்ற முறையில் கூடுதல் சலுகைகள் எதையும் பயன்படுத்த வேண்டாம் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.

மேலும், உங்கள் கீழ் உள்ள நிறுவனங்களை ஊழலற்ற, மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனங்களாக மாற்றுங்கள். பல அரச நிறுவனங்கள் இன்று கடும் நிதி நெருக்கடியில் உள்ளன. அவை சரி செய்யப்படுவது மிகவும் அவசியம். நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய பணிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த அமைச்சுப் பதவிகள் கிடைத்தவுடன், தமக்குக் கிடைக்கும் அமைச்சுக்களிலும் நிறுவனங்களிலும்

04 ஆம் பக்கத்தில்...

## புதிய அமைச்சர்கள் விபரம்

அரசாங்கத்தின் 17 புதிய அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கும் நிகழ்வு தற்போது நடை பெற்று வருகின்றது.

★ தினேஸ் குணவர்தன – அரச சேவை, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
★டக்ளஸ் தேவானந்தா – கடற்றொழில்
★ரமேஷ் பத்திரண– கல்வி, பெருந்தோட்டம்
★பிரசன்ன ரணதுங்க – பாதுகாப்பு, சுற்றுலா
★திலும் அமுனுகம– கைத்தொழில், போக்குவரத்து

02 ஆம் பக்கத்தில்...

## சிங்களவர்களின் போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் பங்கேற்பதால் தமிழ் மக்களுக்கு என்ன இலாபம்



(சுமன்)

சிங்கள இளைஞர்கள் யுவதிகள் தங்களது பிரச்சினைகளை முன்னிறுத்தி போராடும்போது அதில் தமிழ் இளைஞர்கள் பங்குபற்றுவதனால் தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் என்பதை தெரிந்துகொண்டுதான் போராடவேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

02 ஆம் பக்கத்தில்...

## போது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை!



இலங்கையில் நேற்று முதல் (18.04.22) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொது போக்குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகளின் போது அணிவதை தவிர, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என புதிய சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண அறிவித்துள்ளார்.

## புதிய இராஜாங்க அமைச்சர்கள் விபரம்

அரசாங்கத்தின் 21 புதிய இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கும் நிகழ்வு தற்போது நடை பெற்று வருகின்றது.

21 இராஜாங்க அமைச்சர்கள்...

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் அன்னை பூபதியை நினைவு கூறுவதற்கு 11 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

கடந்த 1988, ஏப்ரல்,19, மட்டக்களப்பு மாமாங்கேஷ்வர ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 34, ம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்க வேண்டாம் என காத்தான்குடி பொலிசாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தால் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஷ்வரன், ஞா.ஶ்ரீநேசன், மாநகர முதல்வர் தி.சரவணபவான், முன்னாள் கிழக்குமாகாணசபை உறுப்பினர் இ.பிரசன்னா,

02 ஆம் பக்கத்தில்...

## சலுகைகளை எதிர்பார்க்க வேண்டாம்; ஜனாதிபதி அதிரடி



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களிடம் அமைச்சரவை சலுகைகளை எதிர்பார்க்காமல் செயற்படுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி,

02 ஆம் பக்கத்தில்...

## நஷீர் அஹமட் அமைச்சராக சத்தியப்பிரமாணம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், தற்போது அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகின்றது.

இதில், 17 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவிப்பிரமானம் செய்துகொண்டுள்ளனர்.

ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நஷீர் அஹமட் சுற்றாடல் துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

## இன்றும் நாளையும் 3 மணிநேர மின்வெட்டு

இரண்டு நாட்களுக்கு சுழற்சி முறையில் மின்சாரத்தை துண்டிப்பது தொடர்பில், மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# எவரையும் நம்பமுடியாது, அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை பலப்படுத்த பேராயர் அழைப்பு

நாட்டில் தற்போது ஊழல் நிறைந்த யுகம் தோற்றம் பெற்றுள்ளது எனவும் இதன் காரணமாக இனிமேலும் எவர் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது என்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் மாத்திரமின்றி, அதிகாரம் அற்றவர்கள் கூட ஊழல்வாதிகளாக காணப்படுவதால் 74 ஆண்டுகளுக்குள் அழகிய தாய் நாடு சீரழிந்துவிட்டது என்றும் அவர் கவலை வெளியிட்டார்.



இந்நிலையில் ஊழலால் சீரழிந்துள்ள தாய் நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பலத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பேராயர் அழைப்பு விடுத்துள்ளார்.

பொய்களைக் கூறி ஏமாற்றுதல், நேர்மையற்ற தன்மையின் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகளுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என பேராயர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே முழு நாடும் நாட்டு மக்களும் ஏமாற்றப்பட்டுள்ள இந்த சூழலில் நாட்டை மீள கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து பலமடைய வேண்டும் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்தார்.

# நடுநிலைமை என்பது கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே

மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் என்றும் நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.




கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாடு முழுவதும் நாளுக்கு நாள் தன்னெழுச்சி போராட்டம் வீரியம் பெற்று வருகின்றது.

மக்களின், 'கோட்டா போ' என்ற கோஷம் வலுப்பெறுகிறது. 'ராஜபக்ஷக்களை விரட்டி அடிப்போம், கொள்ளையடித்த பணத்தை திரும்ப பெறுவோம் என்று பல மட்டங்களிலும் போராட்டங்கள் வெடித்திருக்கிறது.

ஆனால், அரசாங்கம் தனது வழமையான அசமந்த போக்கையும் இழுத்தடிப்பையும் செய்து வருகின்றது. வீதிகளிலே மக்கள் அரசாங்கத்தை வீட்டுக்கனுப்ப போராடுகின்றபோது, அதற்கு மதிப்பளித்து, அரசியல் அமைப்பிற்கமைய நாடாளுமன்றத்தில் நாம் அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலையை செய்ய வேண்டி இருக்கின்றது. அதற்காக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் ஆகும். இதில் நடுநிலைமை என கூறி தலைமறைவாக முடியாது. நடுநிலைமை என்பதும் கள்ளர்கூட்டத்தை ஆதரிப்பதே ஆகும்.

நாடாளுமன்றத்தில் உள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளனர். இதனை எதிர்ப்பது என்பது நாட்டை புறம்தள்ளி, மக்களை புறம்தள்ளி, இன்று வீதியில் இறங்கி போராடும் இளைஞர் யுவதிகளின் கருத்தை, கோஷத்தை ஏளனப்படுத்தி, தமது சொந்த நலனுக்காக செயற்படுவதாகும் என அவர் மெலும் தெரிவித்தார்.

# மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தேரியவில்லை

மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தெரியவில்லை என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தனைப் பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளாரென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர், 10 நாட்களாக காலி முகத்திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரு பொதுவான நோக்கத்திற்காகவே தொடர்ந்தும் அனைவரும் போராடி வருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவிவருகிறது. அதே போன்று அத்தியாவசியப் பொருட்களுக்கும் பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளதுடன், மின்சார துண்டிப்பு இடம்பெற்று வருகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளையே காண முடிகிறது. எந்த பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களுக்கு சுமைக்கு மேல் சுமை அதிகரித்துள்ளது. வரலாறு காணாத ஒரு பொருளாதார நெருக்கடியை அரசின் செயற்பாட்டால் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இவை அனைத்துக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார்.



மக்களின் பிரச்சினைகள் ஒருபுறம் இருக்கின்ற சூழலில் அமைச்சரவை மாற்றுகிறோம், அரச அதிகாரிகளை மாற்றுகிறோம் எனக் கூறி அரசாங்கம் மக்களின் போராட்டத்திற்கு தீர்வுக்காணாமையானது,அரசாங்கத்தின் முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிக்காட்டுகிறது.

மக்களின் கோரிக்கை ஒன்றாகவும் அதற்கு அரசாங்கம் வழங்கும் பதில் வேறொன்றாகவும் உள்ளது. இது தலைவலிக்கு மருந்து வாங்க சென்றால் மூட்டு வலிக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு செயற்பாடாகும்.

ஜானாதிபதி செயலகத்திற்கே ஜனாதிபதியால் செல்ல முடியாத சூழல் இருக்கும் தருணத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு ஜனாதிபதி தீர்வுகளை பெற்றுக்கொடுக்க போகின்றார் என்பது கேள்விக்குறியானதொரு விடயமாக மாறியுள்ளது. எனவே மக்களின் போராட்டங்களுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றும் நாளையும் 3 மணிநேர மின்வெட்டு

இதன்படி, இன்று மற்றும் நாளை நாடு முழுவதும் சுழற்சி முறையில் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அனைத்து வலையங்களுக்கும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப் பகுதிக்குள் 2 மணித்தியாலங்களும்,

மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதிக்குள் 1 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின் துண்டிப்பு நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# சலுகைகளை எதிர்பார்க்க வேண்டாம்..

அமைச்சுப் பதவி என்பது பாரிய தொரு பாக்கியம் அல்ல என்றும், அது பெரும் பொறுப்பு என்றும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் என்ற முறையில் சலுகைகள் எதையும் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் திறமையாகவும், தூய்மையான நிர்வாகத்தை நோக்கியும் பணியாற்றுவீர்கள் என எதிர்பார்க்கிறேன், என்றார்.

அரச நிறுவனங்கள் பாரிய நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் ஊழலை கட்டுப்படுத்த உதவுமாறு ஜனாதிபதி மேலும் கோரிக்கை விடுத்தார். மேலும் பொதுச் சேவைக்கு முன்னுரிமை கொடுங்கள் என்றும் கூறினார்.

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அரச நிறுவனங்களை சீர்படுத்துவது மிகவும் அவசியமானது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் அன்னை பூபதியை நினைவு

இலங்கை தமிழரசு கட்சி வாலிபர் அணி தலைவர் கி.சேயோண், மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணி தலைவர் லோ.திபாகரன், சிவில் அமைப்பு தலைவர் ச.சிவயோகநாதன்,வாழைச்சேனை குணசேகரம் ஆகிய 11, பேருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அன்னை பூபதி நினைவு வணக்கம் அவரின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட நாவலடி கடல்கரை ஓரம் அமைந்துள்ள கல்லறையில் வழமையாக நினைவு கூரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சிங்களவர்களின் போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் பங்கேற்பதால் தமிழ்

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினை வீட்டுக்கு செல்லுமாறு கோரி கடந்த எட்டு தினங்களாக காலிமுகத்திடலில் சிங்கள இளையோரினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும், ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகவேண்டும் உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நாடு இன்று பொருளாதார பீதியாக அதாளபாதாளத்திற்குச் சென்றுள்ளது. எவர் ஆட்சிக்கு வந்தாலும் இந்த பொருளாதாரத்தினை தூக்கி நிமிர்த்தக்கூடிய நிலையில்லை. இந்தநிலை எவ்வாறு ஏற்பட்டது என்பதன் தர்ப்பரியம் தெரியாமல் இந்த போராட்டம் நடத்தப்படுகின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் அடக்கி ஒடுக்கப்பட்டபோது அகிம்சை பீதியான போராட்டங்கள் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற்றம்பெற்றபோது தமிழ் மக்கள் மீதான யுத்ததிற்காக இந்த நாட்டினை மாறி மாறி ஆட்சிசெய்த அரசுகள் பில்லியன் கணக்கான டொலர்களை செலவு செய்ததே முதல்காரணமாகும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது இந்த நாட்டில் ஒரு அரசியல் தீர்வு காணப்பட்டிருந்தால் மாறிமாறி வந்த அரசுகள் இந்தளவுக்கு யுத்ததிற்கு டொலர்களை செலவிடவேண்டிய தேவையேற்பட்டிருக்காது.

தற்போதுகூட சிங்கள இளையோர்களினால் முன்னெடுக்கப்படும் போராட்டமானது தாங்கள் முன்வைத்துள்ள ஐந்து கோரிக்கைகளில் முதலாவதாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வினை வரும் அரசாங்கம் முன்வைக்கவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்திருக்கவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

பண்டாரநாயக்க தலைமையிலான ஆட்சி சிங்கள மட்டும் சட்டத்தினை கொண்டுவந்தபோது தமது மொழி உரிமைக்காக இதே காலி முகத்திடலில் ஜுன் மாதம் 05ஆம் திகதி தமிழ் தலைமைகள் சத்தியாக்கிரக போராட்டம்செய்தார்கள்.

அப்போராட்டத்தின்போது சிங்கள காடையர்கள் ஏவிவிடப்பட்டு தமிழ் தலைமைகளின் மண்டைகள் உடைக்கப்பட்டதுடன் காதுகள் கடித்து துப்பப்பட்ட வரலாறுகள் எங்களுக்கு தெரியும்.

தமிழ் மக்கள் தற்போதுள்ள நிலையில் இந்த போராட்டத்தினை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தப்போகின்றோம் என்பதை சற்று சிந்திக்க வேண்டும். 2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை ஒப்படைத்த காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் 1800 நாட்களையும் தாண்டி வடகிழக்கில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

சிங்கள இளைஞர்களின் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இன்று ஒரு சில தமிழ் தலைமைகள் அறைகூவல் விடுக்கின்றனர். இவ்வாறு அறைகூவல் விடுக்கும் அந்த பிரதிநிதிகள் வடகிழக்கில் தமது உறவுகளை தேடி போராடும் போராட்டத்திற்கு இளைஞர் யுவதிகளை ஒருங்கிணைப்பதற்கு எந்தவித அக்கரையும் அற்றவர்களாகவேயிருந்தனர்.

நாங்கள் பாதிக்கப்பட்ட சமூகம். யுத்ததினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தினால் இன்று மின்சாரத்திற்கும் எரிபொருளுக்கும் பால்மாவுக்கும் போராடுகின்றார்களே தவிர இந்த பொருளாதார பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணத்தினை கண்டறிந்து அதனை நிவர்த்திப்பதற்கான எந்த முயற்சியும் காட்டப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய இராஜாங்க அமைச்சர்கள் விபரம்

★ ஜீ.எல்.பீரிஸ் – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
★ ரோஹன திசாநாயக்க – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர்
★ அருந்திக்க பெர்னாண்டோ – பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
★ லொஹான் ரத்வத்த – நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
★தாரக பாலசூரிய – வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்
★இந்திக அனுருந்த – வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்
★சனத் நிஸாந்த – நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்
★சிறிபால கமலத் – மகாவெலி இராஜாங்க அமைச்சர்
★அனுராத ஜயரத்ன – நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்
★சிசிர ஜயகொடி – சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்
★பிரசன்ன ரணவீர – கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
★டீ.வி. சானக்க சுற்றாடல் மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்
★ டீ.பீ. ஹேரத் – கால்நடைவள இராஜாங்க அமைச்சர்
★ காதர் மஸ்தான் – கிராமிய பொருளாதார பயிர்செய்கை மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
★அசோக பிரியந்த – வர்த்தக இராஜாங்க அமைச்சர்
★ஏ. அரவிந்த்குமார் – தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்
★கீதா குமாரசிங்க – கலாசார இராஜாங்க அமைச்சர்
★குணபால ரத்னசேகர – கூட்டுறவு சேவை விற்பனை அபிவிருத்தி மற்றும் நுர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
★கபில நுவன் அதுகோரல – சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
★கயஷான் நவனந்த – சுகாதார இராஜாங்க அமைச்சர்
★சுரேன் ராகவன் – கல்வி சேவை மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

# புதிய அமைச்சர்கள் விபரம்

★கனக ஹேரத்– நெடுஞ்சாலைகள்
★விதுர விக்ரமநாயக்க – தொழில்
★ஜனக வக்கும்புர – விவசாயம், நீர்பாசனம்
★செஹான் சேமசிங்க – வர்த்தகம், சமுர்த்தி அபிவிருத்தி
★மொஹான் பிரியதர்ஷன யாபா – நீர் வழங்கல்
★ விமலவீர திசாநாயக்க – வனசீவராசிகள் மற்றும் வனவள அபிவிருத்தி
★ காஞ்சன விஜேசேகர – எரிசக்தி, மின்வலு
★ தேனுக விதானகமகே – விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்
★ நாலக கொடஹேவ – ஊடகம்
★ சன்ன ஜயசுமன – சுகாதாரம்
★ நசீர் அஹமட் – சுற்றாடல்
★ பிரமித பண்டார தென்னகோன் – துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை



# டோலர்கள் எல்லாம் ராஜபக்சே குடும்பத்தினரின் பக்கட்டுகளில் உள்ளது! நாடு அதல பாதாளத்தை நோக்கிச் செல்கிறது!

## திருக்கோவிலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச காட்டம்!





(காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் டொலர்கள் இல்லை இல்லை என்கிறார்கள் . ஆனால் நான் சொல்கிறேன் நாட்டிலுள்ள டொலர்கள் எல்லாம் ராஜபக்சக்கள் பக்கட்டுகளில் இருக்கின்றது .

இவ்வாறு நேற்று முன்தினம் திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச வைத்திய சாலைகளுக்கு வைத்திய உபகரணங்களை வழங்கி வைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார்.

சஜித் பிரேமதாச அவர்களின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசத்துக்கான இணைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் ஏற்பாட்டிலே சுவாசம் வேலைத் திட்டத்தின் கீழ் திருக்கோயில் ஆதார வைத்தியசாலைக்கு 26 லட்சத்து 54ஆயிரம் ரூபாவுக்கான வைக்க உபகரணங்களும் பனங்காட்டு வைத்தியசாலைக்கு 21 லட்சத்து 34 ஆயிரம் ரூபாவுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தொடர்ந்து பேசுகையில்..

நாட்டில் லஞ்சம் ஊழல் திருட்டு களவு அதிகரித்திருக்கின்றது. இன்று நாடு அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. பொறுமை காத்த மக்கள் வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆர்ப்பாட்டமும் கியூ வரிசையும். காலிமுகத் திடலில் இளைஞர்களும் யுவதிகளும் கடந்த பல நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எந்தவிதமான அரசியல் தலையீடு இன்றி அவர்கள் சுயமாக முன்வந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

சுதந்திரமாக நாங்கள் வாழ வேண்டும் விஷம் போல் ஏறி உள்ள விலைவாசி குறைக்க வேண்டும் என்றெல்லாம் கூறி அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

நிச்சயமாக எமது அரசாங்கம் அமையப் போகின்றது நான் ஜனாதிபதியாக வருவேன். எமது அரசில் இப்பொழுது இலஞ்சம் ஊழல் கொள்ளையிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அவர்களிடம் உள்ள அனைத்து டொலர்களையும் பறிமுதல் செய்து மக்களுக்காக நாங்கள் முதலீடு செய்ய இருக்கிறோம்.

காலிமுகத்திடலில் கூடியுள்ள மக்கள் தங்களுக்காக அல்லது கட்சிக்காக அந்த ஆர்ப்பாட்டத்தை செய்யவில்லை. நாட்டிலுள்ள 2 கோடியே 22 லட்சம் மக்களுக்காக செய்கின்றார்கள்.

உண்மையிலே பாதுகாப்பு படையினர் போலீசார் மக்களுக்காக செயற்பட்டு வருகின்றார்கள் .இந்த வகையிலே அரச கூலிப் படையினர் ஆர்ப்பாட்டத்தை நசுக்குவதற்கு முற்படுவதாக நாங்கள் அறிகிறோம் .

படையினர் அரசகூலிப்படை அல்ல.

அவர்கள் யாருக்கும் அடிபணிய மாட்டார்கள். மக்களை பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை படையினருக்கும் பொலிசாருக்குகும் இருக்கிறது .எமது நாட்டு படையினரும் போலீசாரும் தரமான வர்கள். அவர்கள் எந்த ஒரு கட்டத்திலும் இந்த அரசகூலிப்படையாக மாற மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை .

இந்த வேளையிலே நாட்டிலே எதையெடுத்தாலும் பற்றாக்குறை. வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு. இதனை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த பொழுதிலும் வெளிநாட்டு உதவிகள் பெற்று இந்த உதவிகளை வைத்தியசாலைகளுக்கு செய்து வருகிறோம்.

அதாவது மக்களது வாக்குகளை பெற்று வந்த அரசாங்கம் விமானங்களை கொள்வனவு செய்யவும் அதிவேகப் பாதைகளை நிருமாணிக்கவும் கோடிக்கணக்கில் நிதியை ஒதுக்கி வருகிறது ..

இன்றைய இந்த பொருளாதார முடக்க நிலையில் இது அவசியமா என கேட்கிறேன் .

அதிவேகப் பாதைக்கு நிதி ஒதுக்கினால் அதிவேகமாக கொள்ளை அடிக்கலாம் என்பதற்காகவே அவர்கள் இதனை செய்கின்றார்கள். இதை விட வேறு காரணம் இருக்க முடியாது .நாடும் நாட்டு மக்களும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இந்த விமானங்கள் அதிவேகப் பாதைகள் தேவையா.?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

# திருமலையில் பசிப்பிணி தீர்க்க அன்னதானம் வழங்கி வைப்பு





(அ . அச்சுதன்)

சுவிற்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது.

அன்னதான நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது

புலம்பெயர் வாழ் ஆதிபராசக்தி அம்மாவின் பக்தர்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை அன்புவழிபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது.

பசிப்பிணி நீக்கும் அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் எண்ணக்கருவிற்கேற்ப அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் எதிர்ப்பு போராட்டம்









(பாறுக் ஷிஹான்)

கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை எனவும் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை ஞாயிற்றுக்கிழமை(17) ஆராதனையின் பின்னர் மேற்கொண்டனர்.

இக்கவனயீர்ப்பு போராட்டமானது கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன் தலைமையில் காலை இடம்பெற்றதுடன் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பி குறித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது போராட்டகாரர்கள் கர்தினாலின் குரலுக்கு செவிசாயுங்கள் ,இனவாதம் காட்டி உறவுகளை பிரிக்காதீர்கள், இறந்து போனவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி ,இறந்து போனவர்களுக்கு நீதி வேண்டும், இனவாதம் காட்டி எங்களை பிரிக்காதீர்கள் ,பயங்கரவாதத்தினை நிறுத்துங்கள் ,அரசன் அன்று கொல்வான் இறைவன் நின்று கொல்வான் ,என அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்கள் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை குறித்த போராட்டத்திற்கு பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

மேலும் உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 3 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதனை நினைவு கூர்ந்து நாடளாவிய ரீதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட திருபலிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# 13 வயது சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி 10 இலட்சம் ரூபா கப்பம் கேட்டவர்கள் கைது

(பாறுக் ஷிஹான்)

13 வயது சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ ஒன்றினை காட்டி 10 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டி வந்த இரு சந்தேக நபர்களை தலைமறைவாக இருந்த நிலையில் கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


கடந்த 2022.01.05 அன்று சிறுமியின் தாயாரினால் அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 13 வயதான தனது மகளை 3 சந்தேக நபர்கள் வீடியோ காணொளி ஒன்றினை முன்வைத்து கப்பம் கேட்பதாக கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பொலிஸார் 3 சந்தேக நபர்களையும் அடையாளம் கண்ட நிலையில் தேடுதல் மேற்கொண்டு வந்தனர்.எனினும் சந்தேக நபர்களில் ஒருவரான சாய்ந்தமருது 3 இனை சேர்ந்தவர் டுபாய் நாட்டிற்கு தப்பி சென்ற நிலையில் ஏனைய சந்தேக நபர்களில் கப்பம் கோரியவரான மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபர் கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய இச்சம்பவத்திற்கு உடந்தையான செயற்பட்ட மற்றுமொரு 31 வயதுடைய சந்தேக நபர் சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைதானார்.

குறித்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமை குழுவினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதுடன் வெளிநாட்டிற்கு தப்பி சென்ற சந்தேக நபரினை கைது செய்ய நீதிமன்ற நடவடிக்கை ஊடாக சர்வதேச பிடியாணை உத்தரவினை பெறுவதற்கு எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





திருகோணமலை காந்திநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 08ம் நாள் திருவிழா 16.04.2022 அன்று இடம் பெற்ற போது அம்பாள் சிம்ம வாகனத்தில் ஆலயத்தின் உள் வீதி வலம் வருவதையும் தீபாரதனைகள் இடம் பெறுவதையும் பக்தர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள்: வடமலை ராஜ்குமார்

# புலமையாளர்கள் கௌரவிப்பு விழா







( காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு ஏற்பாடு செய்த புலமையாளர் கௌரவிப்பு விழா அமைய தலைவர் பிரதம பொறியியலாளர் பி. ராஜமோகன் தலைமையில் காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்றது .

அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரிபுள்ள நாயகம் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக பொலனறுவை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவ.சசிகரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறில் , பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வலய கல்விப்பணிப்பாளர் செ.புவனேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. புலமையாளர்கள் பாராட்டி கொரவிக்கப்பட்டனர்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கை



அமைச்சுப் பதவிகளையும் பணத்தையும் வழங்கி பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் சுற்றாடல் அமைச்சராக பதவியேற்றமை தொடர்பில் கட்சியின் உயர்பீடம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடி தீர்மானம் மேற்கொள்ளவுள்ளதாக கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நியூஸ்பெஸ்ட்டுக்கு தெரிவித்தார்.

ஏற்கனவே கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட், பைசல் காசிம், எச்.எம்.எம்.ஹாரிஸ், எம்.எஸ்.தௌபீக் ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை இடம்பெற்று வரும் நிலையிலேயே நசீர் அஹமட் அமைச்சராக பதவியேற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைக்கு மாறாக மீண்டும் செயற்பட்டுள்ள நசீர் அஹமட் தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தாருஸ்ஸலாமில் கூடவுள்ள கட்சியின் உயர்பீடம் இறுதி முடிவை எடுக்கவுள்ளதாக நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் அன்றைய தினம் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் அவர் சுட்டிக்காட்டினார்.

# எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையும் வாழ்வாதார முன்னேற்றத்தினையும் இலக்காகக் கொண்ட திட்டங்களும் முன்னெடுக்கப்படும்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வினை காணும் வகையில் கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள் தொடரும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையும் வாழ்வாதார முன்னேற்றத்தினையும் இலக்காகக் கொண்ட திட்டங்களும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக அமைச்சர்கள் பதவி விலகிய நிலையில், நேற்று மீண்டும் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

நீண்ட காலமாக தமிழ் மக்களினால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதி என்ற அடிப்படையிலும், எம்மால் வளர்க்கப்பட்டு வருகின்ற தேசிய நல்லிணக்கம் காரணமாகவும் கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், கடந்த இரண்டு வருடங்களாக நாடளாவிய ரீதியில் அடையாளப்படுத்தப்பட்ட கடற்றொழில்சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் புதிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

இதன்மூலம் கடற்றொழில் ஏற்றுமதிகளை விஸ்தரிப்பதன் மூலம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சிக்கலுக்கு அடிப்படை காரணிகளில் ஒன்றான அந்நியச் செலாவணிப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் மக்களுக்கு தேவையான



போஷாக்கான கடலுணவுகள் தரமானதாகவும் நியாயமான விலையில் கிடைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று எமது மக்களின் வாழ்வாதார எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் இதனை பயன்படுத்துவதே எமது திட்டமாக இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கடலட்டை வளர்ப்பு உட்பட்ட நீர்வேளாண்மை சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை மேலும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் விஸ்தரிப்பதுடன் பருத்தித்துறை, குருநகர், பேசாலை உட்பட பல இடங்களில் அமைக்கத் திட்டமிட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பது உட்பட்ட கடற்றொழில் அபிருத்திகளை மேற்கொண்டு நிலையான வாழ்வாதாரத்தை எமது மக்களுக்கு உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதேவேளை, தேசிய நல்லிணக்கம் காரணமாக தற்போது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருமைகின்றமையானது, எமது மக்கள் போதிய அரசியல் பலத்தினை எமக்கு வழங்குவார்களாயின், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையும் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என்ற யதார்த்தமும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

# மக்களின் குரலை தோடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது; தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

மக்களின் குரலை தொடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது என தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் முன்வந்து கலந்துரையாடி தீர்வு காண வேண்டுமென அந்த ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையடி அவற்றுக்கான இணக்கமான தீர்வொன்றை எட்ட வேண்டும் என வலியுறுத்தியுள்ள தேர்தல் ஆணைக்குழு மக்களின் குரலை தொடர்ந்தும் புறக்கணிப்பது ஆபத்தானது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சர்வதேச நாணயநிதியத்தை நாடாதமை இரசாயன உரம் வழங்காதமை தவறு



தொழில் வழங்குவதற்குத் தயாராகி வருவதை நாம் அறிவோம்.

இத்தகைய சூழ்நிலையில் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சுக்கள் உண்மையில் செய்ய வேண்டியது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுதான்.

மக்கள் கோரிய முறைமையை (System Change) மாற்ற இன்றைய நெருக்கடி ஒரு நல்ல சந்தர்ப்பம். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதே நேரத்தில், இந்த இளைஞர்களிடம் அதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளோம். கொவிட் தொற்று நோய் அதே போன்று கடன் சுமை போன்ற விடயங்கள். அவ்வாறிருந்தாலும் எங்களாலும் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. அவை சரி செய்யப்பட வேண்டும். அவற்றை சரி செய்து கொண்டே நாம் முன்னேற வேண்டும். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்திற்கு இதற்கு முன்னர் சென்றிருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதே போன்று, இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு வழங்காமல் இருந்தது தவறு என நினைக்கிறேன். அவற்றை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல சிக்கல்களால் இன்று மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற வரிசையில் நின்று நேரத்தைச் செலவழிப்பதால் ஏற்படும் வேதனையும், அசௌகரியமும், கோபமும் மிகவும் நியாயமானது.

கடந்த காலத்தில் என்ன குறைகள் ஏற்பட்டு இருந்தாலும், தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான எனது பொறுப்பாகும். எந்த சிரமத்திற்கும் சவாலுக்கும் மத்தியிலும் அந்தப் பொறுப்பில் இருந்து விலக மாட்டேன் என்று என்னை நியமித்த மக்களிடம் உறுதியளிக்கிறேன்.

தற்போது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளில் நாம் முன்னுரிமை வழங்க வேண்டியது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கே ஆகும். அதைத் தீர்க்காமல் வேறு எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நான் ஏற்கனவே பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளேன்.

அதன் அடிப்படையான மற்றும் முக்கியமான நடவடிக்கைகளாக புதிய நிதியமைச்சர் ஒருவர், நீண்டகால அனுபவமுள்ள மத்திய வங்கியின் புதிய ஆளுநர் மற்றும் திறைசேரியின் புதிய செயலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கத்திற்கும் எனக்கும் ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச அனுபவமும் பொருளாதார முகாமைத்துவத் துறையில் உயர் அங்கீகாரமும் கொண்ட மூன்று பொருளாதார நிபுணர்களை நியமித்துள்ளேன். மேலும், அரசுக்கு உதவுவதற்காக பொது மற்றும் தனியார் துறை நிபுணர்கள் அடங்கிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவுடன் இணைந்து கடந்த சில நாட்களாக நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் நிலை நிறுத்த நாம் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

நாம் எப்போதும் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். மக்களிடம் யதார்த்தத்தை மறைப்பதில் அர்த்தமில்லை. நீங்கள் பெறும் தகவல்களைப் பற்றி அறிவுபூர்வமாக விசாரித்து உண்மைகளைப் புரிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சினையை புரிந்து கொண்டால் மட்டுமே தீர்வு காண முடியும். அதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் அவசியம்.

இன்று நமது நாடு கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையையும் கடன் நெருக்கடியையும் சந்தித்து வருகிறது. இந்த நேரத்தில் எங்களிடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியை மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். மேலும் அவசர அந்நியச் செலாவணி தேவைகளுக்குப் பணம் தேட வேண்டும்.

குறுகியகால வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள எங்களின் சிரமத்தை நாங்கள் ஏற்கனவே கடன் வழங்கியவர்களுக்கு தெரிவித்துள்ளோம். அதன்படி கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எனது பொருளாதார முகாமைத்துவக் குழு ஏற்கனவே எமது நட்பு நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்பு, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத்திட்டத்தில் இணைய விருப்பம் உள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. அந்த கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்கனவே அமெரிக்கா சென்றுள்ளனர்.

எண்ணெய், மருந்துப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இந்தியாவிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுள்ளோம். மேலும், உலக வங்கி எரிவாயு, உரம், பால்மா மற்றும் மருந்துப் பொருட்கள் இறக்குமதிக்கு ஒத்துழைப்பு வழங்கவும் முன்வந்துள்ளது.

நாட்டு மக்களுக்கு தேவையான எண்ணெய் மற்றும் எரிவாயு தற்போது நாட்டுக்கு கிடைக்கப் பெற்றாலும், சமீப நாட்களாக அது முறையாக விநியோகிக்கப்படவில்லை. இதன் காரணமாக மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்கும் வகையில் நாம் தற்போது செயற்பட்டு வருகின்றோம்.

சந்தையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படும் என சந்தேகித்து மக்களால் பெருமளவில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படுகின்றமை ஆகும். இதன் காரணமாக நாட்டில் எரிபொருளுக்கான தேவை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

மக்கள் படும் இன்னல்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் கும்பல் ஒன்றும் உருவாகி உள்ளது. இந்த நிலையை கட்டுப்படுத்தவும் அரசு தலையிட்டு வருகிறது. இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில், இவ்வாறான விடயங்களை தவிர்க்குமாறு நான் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். நாம் அவற்றைச் செயற்படுத்தி வருகிறோம்.

அண்மைக்காலமாக நீண்டகால மின்வெட்டுக்கு மின் உற்பத்தி நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டமையே காரணம் ஆகும்.

சிக்கல்களுக்கு மத்தியிலும் தேவையான எரிபொருளை பெற்றுக்கொண்டு, எதிர்வரும் காலத்தில் மின்வெட்டை இரண்டு மணித்தியாலங்களாக மட்டுப்படுத்திக்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம்.

குறுகியகால பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடுவதோடு, இந்த நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக பல தசாப்தங்களாக காலதாமதமாகி வரும் சில தீர்மானங்களை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாம் எடுக்க வேண்டியுள்ளது. பொருளாதாரத்தை சரியான திசையில் வழிநடத்தி, நமது எதிர்கால சந்ததியினரின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இப்போது நமக்கு உள்ளது.

இன்று நாம் எதிர்கொள்ளும் கடுமையான சவாலை சமாளிக்க, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களைப் போன்று நட்பு நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம். நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால் மட்டுமே அந்த ஒத்துழைப்புகளைப் பெற முடியும்.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணையுமாறு நான் அழைக்கிறேன். மேலும், இந்த நெருக்கடியைத் தீர்ப்பதில் எங்களுடன் இணையுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் நான் அண்மையில் அழைப்பு விடுத்தேன். என்னுடைய அழைப்பை ஏற்று எங்களுடன் இணைந்து பணியாற்ற அவர்களுக்கு இன்னும் வாய்ப்பு உள்ளது.

இந்த கடினமான காலங்களில், அரச நிர்வாகத்தை முன்னெடுக்கவும், சர்வதேச சமூகத்தை கையாளவும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமிக்க நான் முடிவு செய்தேன். புதிய அமைச்சரவையை நியமிப்பதில் ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் தாமாக முன்வந்து அமைச்சரவையில் இருந்து விலகியதன் மூலம் இளைஞர்கள், படித்தவர்கள் என ஒரு புதிய குழுவுக்கு இடம் கொடுத்துள்ளனர்.

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடுகளில் இலங்கையும் ஒன்று. அனைத்து குடிமக்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் அரசியலமைப்பின்படி செயற்படும் ஜனநாயக ஆட்சிமுறையில் தங்கியுள்ளது.

சமூகத்தின் மிகவும் சுறுசுறுப்பான பகுதியினரான இளைஞர்கள் தங்கள் அழுத்தத்தை அவர்களுக்கே உரிய வழியில் வெளியிடுவதில் எந்த தவறும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க உள்ள இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கவும், ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்யவும், போராட்டங்களை நடத்தவும் இன்று முழு சுதந்திரம் பெற்றுள்ளனர்.

அவர்கள் தமது போராட்டங்களை ஆக்கப்பூர்வமாக முன்னெடுத்துச் செல்லும் போது, ஒழுக்கத்துடன் கடமையாற்றும் பொலிஸார், முப்படையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை குறிப்பாக நான் பாராட்டுகின்றேன்.

உங்களுக்குத் தெரியும், கடந்த இரண்டரை ஆண்டுகளில், நான் போராட்டங்களுக்கு, ஊர்வலங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளித்து இருந்தேன். சுதந்திரம் வழங்கியுள்ளேன். என் அலுவலகத்திற்கு அருகில் வந்த போராட்டக்காரர்களை கலைக்கக்கூட நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்கள் நாட்டை உண்மையாக நேசிக்கும் இளைஞர்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் நாட்டுக்காக முன்வருவதை எதிர்காலத்திற்கான சாதகமான அடையாளமாகவும் பார்க்கிறேன்.

இனம், மதம், அரசியல் வேறுபாடின்றி நாட்டை நேசிக்கும் பெரும்பாலான மக்கள் தற்போதைய ஆட்சியின் தவறுகளை திருத்தி நாட்டைக் கட்டியெழுப்பவே விரும்புகின்றார்கள், நாட்டைத் தோல்வி அடையச் செய்வதற்கு அல்ல என்று நான் நம்புகிறேன். எனவே, உங்கள் ஜனநாயகப் போராட்டங்களை வன்முறைப் பாதையில் திசை திருப்ப சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்த இளைஞர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மகாசங்கத்தினர், மதகுருமார்கள், தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மற்றும் பல்வேறு அரசியல் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் நாட்டின் நிலைமை மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து கருத்து தெரிவித்துள்ளனர். அந்த ஆலோசனைகள் அனைத்தையும் நான் உணர்வுபூர்வமாகக் கேட்கிறேன்.

அறுபத்து ஒன்பது இலட்சம் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி மிகுந்த நம்பிக்கையுடன் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். எனது பதவிக்காலத்தில் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளேன். அதன்படி, தற்போதைய நெருக்கடியை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்குவதற்கு ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்களின் பணத்தை நான் திருடியதில்லை. அன்றும் இன்றும் என் கைகள் சுத்தமாகவே உள்ளன. நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டது பலரது கோரிக்கைகளுக்காகவே அன்றி அதிகார தேவைக்காக அல்ல. எனது வாழ்நாளில் முப்படையில் அதிகாரியாக 20 ஆண்டுகள் இந்த நாட்டிற்கு சேவை செய்துள்ளேன். நான் வெற்றிகரமாக சேவை செய்துள்ளேன். அத்துடன், பாதுகாப்புச் செயலாளராக நான் இந்த நாட்டுக்கு வெற்றிகரமாக சேவையாற்றியுள்ளேன். நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்தின் கட்டமைப்பிற்குள் நான் எப்போதும் செயற்படுகின்றேன்.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. எனவே, அரசியலமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.

அதற்கிணங்க, நாட்டின் அதியுயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து, எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதாக நான் உறுதியளிக்கிறேன், மேலும் இது தொடர்பாக மக்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை உங்களை வாழ்த்துகிறேன். மேலும் மக்கள் எதிர்பார்ப்பது போல் நேர்மையாகவும், திறமையாகவும், தூய்மையாகவும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# உலகவரலாற்றில் இடம்பிடித்த உண்மைத்தியாகி மட்டக்களப்பு மண் ஈன்ற அன்னை பூபதி

## இன்று 34 ஆவது ஆண்டு நினைவாகும்



கடந்த 34, வருடங்களுக்கு முன் வடக்கு, கிழக்கில் ஒரு அன்னிய நாட்டு படை எம்மண்ணில் நிலை கொண்டிருந்த காலம். அது இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 யூலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டு 13ஆவது அரசியல் அமைப்பு மூலம் மாகாணசபை சட்ட மூலம் அறிமுகமான காலம்.

அந்தக்காலத்தில் இந்திய அமைதிப் படைகள் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகள் எங்கும் முகாம் அமைத்து, வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு அமைதி என்ற போர்வையில் பல துன்புறுத்தலகளை செய்து வந்த காலம். அப்படியான வேளையில் தான் அன்னை பூபதி அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய நிலை உருவானது.

முதலில் யார் இந்த அன்னை பூபதி என்பதை பார்ப்போம். மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளர்களில் ஒருவராவார். 1932ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 03ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்த தாயார். அவர் தனது 56ஆவது வயதில் இந்த தியாகத்தில் தன்னை ஈர்த்தார்.

விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப் படைக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டக்களப்பு,அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்.

இந்த கோரிக்கைகளை முன்வைத்தே மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988, மார்ச்,19ஆம் திகதி சாகும்வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை அன்னை பூபதி ஆரம்பித்தார்.

மகாத்மா காந்தியின் அகிம்சை போராட்டாத்தால் விடுதலை பெற்ற பாரத நாடு என வரலாறு கூறப்படும் இந்திய நாடு, அன்னை பூபதியின் அகிம்சைவழி போராட்டத்தை கணக்கில் எடுக்கவில்லை.

போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னமே இந்தியப் படை அதிகாரிகளுடன் பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப்படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

**இன்று 34, ம் ஆண்டு நினைவு இடம்பெறும் வேளையில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபாய ராபக்சவுக்கும், பிரதமரான அவரின் சகோதரர் மகிந்த ராபக்சவுக்கு எதிராகவும் அவர்களை பதவி விலக வேண்டுமென அவர்களை ஆதரித்த சிங்கள மக்களே காலிமுகத்திடலில் திரண்டு இரவு பகலாக தொடர் ஆர்பாட்டங்களை நடத்திவருவதை காணலாம்**

ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில், 1988ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அந்த பேச்சுவார்தையில் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப் படவில்லை.

போராட்டம் தொடர்ந்து நடந்தது. 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அந்த பேச்சுவார்த்தையும் கணக்கில் எடுக்கப்படவில்லை அதன்பின்னரே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

அன்னம்மா டேவிட் என்ற தாயாரே இந்த உண்ணாவிரதம் இருப்பதற்காக தாமாகவே முன்வந்தார் அவர் உண்ணா நோன்பை 1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் ஆரம்பித்தார். ஆனால் இந்தியப்படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை 19மார்ச் 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது எனக் கடிதம் எழுதி வைத்தார்.

சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது.

ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45, மணிக்கு அவர் உயிர் நீத்தார்.

மட்டக்களப்பு மண்ணே கண்ணீரில் மூழ்கியது அன்னையர் முன்னணியினர் அன்னைபூபதியின் உடலத்தை சூழ்ந்து ஒப்பாரி வைத்து அழுதனர். அவரின் திருவுடல் முகத்துவாரம் வீதியில் உள்ள சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து மலர் மாலை, மலரஞ்சலி செலுத்தி வழிபட்டவண்ணம் இருந்தனர்.

என்றாலும் மக்கள் மனதில் ஒரு அச்ச உணர்வும் தென்பட்டது. இந்திய அமைதிப்படையினரின் அச்சுறுத்தலை தாண்டியே மக்கள் இறுதி வணக்கத்தை செலுத்தினர். பதாதைகளும், அஞ்சலி துண்டுப்பிரசுரங்களும், தமிழ் ஊடகங்களில் முதன்மை செய்தியாகவும் அன்னை பூபதியின் தியாக மரணம் வெளிக்கொணரப்பட்டன.

**அன்னம்மா டேவிட் என்ற தாயாரே இந்த உன்னாவிரதம் இருப்பதற்காக தாமாகவே முன்வந்தார் அவர் உன்னா நோன்பை 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் ஆரம்பித்தார் . ஆனால் இந்தியப்படையினர் உன்னாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.**



**(பா.அரியநேத்திரன்)**

1988, எப்ரல் 19ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.45, மணிக்கு உயிர் பிரிந்த அன்னைபூபதியின் வித்துடல் 1988, ஏப்ரல், 22 வெள்ளிக்கிழமை வரை முகத்துவாரவீதி சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக மூன்று நாட்கள் தொடராக வைக்கப்பட்டு 22ஆம் திகதி பி.ப: 2.15, மணிக்கு ஈமைக்கிரியைகள் இடம்பெற்று அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

சர்வமத பெரியார்கள், பொதுமக்கள், அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் முகத்துவார வீதி ஊடாக அரசடி சந்தி கல்முனை வீதியால் கல்லடிப் பாலத்தை கடந்து கடற்கரை வீதி வழியாக நாவலடியை அடைந்து அங்கு மாலை வேளையில் அன்னை பூபதியின் வித்துடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் மண்போட்டு இறுதி மரியாதையை செலுத்தினர் நாவலடியில் இன்றும் அன்னைபூபதியின் நல்லடக்க நினைவிடம் அப்படியே உள்ளது.

கடந்த 2004, டிசம்பர், 26இல் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தம் சுனாமி தாக்கத்தால் நாவலடி ஊர் முழுமையாக பாதிக்கப்பட்டு பல கட்டங்கள் ஆலயங்கள் சேமக்காலை கல்லறைகள் சேதமாக்கப்பட்டபோதும், அன்னை பூபதியின் கல்லறையில் எந்த சேதங்களும் ஏற்படவில்லை என்பதை இந்த இடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இன்று 34, ஆண்டுகள் அன்னை பூபதி மறைந்தாலும் அவர் தியாகம் எம்மைவிடு பிரியாது, உலக வரலாற்றில் ஒரு பெண் உண்ணாநோன்பு இருந்து உயிர்த்தியாகம் செய்த வரலாறு வேறு எந்த நாட்டிலும் இல்லை ஈழ மணித் திருநாட்டில் மட்டக்களப்பு மண்ணின் 56, வயது நிரம்பிய தாய் தியாகி அன்னை பூபதிக்கு மட்டுமே உண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்வோம். இன்று 34, ம் ஆண்டு நினைவு இடம்பெறும் வேளையில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டா பாய ராஷபக்சவுக்கும், பிரதமரான அவரின் சகோதரர் மகிந்த ராஷபக்சவுக்கு எதிராகவும் அவர்களை பதவி விலக வேண்டுமென அவர்களை ஆதரித்த சிங்கள மக்களே காலிமுகத்திடலில் திரண்டு இரவு பகலாக தொடர் ஆர்பாட்டங்களை நடத்திவருவதை காணலாம்.

அன்னை பூபதி அவர்களின் 34, வது ஆண்டில் அவர் தமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காவே தமது உயிரை தியாகம் செய்தார் அவரின் நோக்கம் நிறைவேற கொள்கை தவறாமல் பயணிப்பதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.






## மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளன்று

# தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது பதவிகளை இரத்து செய்து நினைவேந்தல் முற்றத்தில் சத்தியப்பிரமானம் செய்ய வேண்டும்








**(க.ருத்திரன்)**

மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளன்று தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது பதவிகளை இரத்து செய்துவிட்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திற்கு வந்து சத்தியப்பிரமானம் செய்யுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரேழுச்சி இயக்க இணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமி பகிரங்க அழைப்பு விடுத்தார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான கலந்துரையாடல் முல்லைத் தீவு வட்டுவாகல் அம்மன் கோவிலுக்கு முன்னால் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

இதன்போது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் முன்வைத்த கருத்தானது;

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் 13யும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொள்கின்றவர்களை ஏற்பாட்டுக்குழு முற்றுமுழுதாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தார். இதன்போது வடக்கு கிழக்கு முன்னேற்றக் கழகத் தலைவர் கு.வி.லவகுமார் இவரது கருத்துக்கு மாற்றுக் கருத்தாக தெரிவிக்கும்போது

ஒற்றையாட்சிக்கு கீழ் உள்ள அரசாங்கத்திடமே நீங்கள் தங்களது சத்தியப்பிரமானங்களை செய்துள்ளீர்கள் எனவே தங்கது பதவிகளை இராஜினாமா செய்து விட்டு மக்களை வழி நடத்துகின்ற தலைவர்களாக நீங்கள் வருகின்றபோது உங்கள் பின்னே மக்களது விடுதலைக்காக நாங்கள் வரத்தயாராகவுள்ளோம். 13 ஆவது திருச்சட்டத்தை மக்களுக்குள் திணித்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசியல்மயமாக்கவேண்டாம் இது ஒரு உயிர் நீத்த மக்களது நினவு நாள். என்று கூறினார்.இதன்போது கூட்டத்தில்அமைதியின்மை ஏற்பட்டது. ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்தும் முகமாக வேலன் சுவாமி இவ்வாறு தமது கருத்தினை தெரிவித்தார்.

அவர் தொடர்நது உரையாற்றும்போது தெரிவித்ததாவது

இந்த ஒற்றையாட்சிக்குள் எதுவும் கிடைக்கப்போவதில்லை சர்வதேச பரிகாரா ரீதியாக பொதுசன வாக்கெடுப்புத்தான் வேண்டும். எங்களுடைய இனத்தின் தலைவிதியை நாங்களே தீர்மானிப்போம் 13 ஐ நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்.13 எங்களுக்கு தேவையில்லை சமஸ்டி கடடமைப்புதான் தேவையென்று எங்களுடைய பாராளுமன்ற உறப்பினர்கள் பாராளுமன்றத்திலே குரல் எழுப்புகின்றனர். சில விடயங்களை உணர்வுகளை இலக்குகளை நோக்கி நகர்த்தும்போதுதான் சமஸ்டி கட்டமைப்பை கேட்கும்போது அதற்கும் முரன்படுகின்றோம்.பல விதமான குழப்பங்களை எங்களுடைய அரசியல்வாதிகளே செய்து கொண்டிருக்கின்றனர்.வார்த்தைகளை வைத்தே பிரச்சினைப் பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

எங்களுடைய தமிழ் பரப்பிலே இருக்கின்ற உண்மையான தமிழ் தேசிய அரசியல்வாதிகளாக இருக்கட்டும் போலியான தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளாக இருக்கட்டும் அனைவரும் ஒரு கொள்ளைக்கு கீழே உடன்பட்டு வாருங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்க்பட்டபோது ஒரே தலைமை இருந்தது.இன்று அந்த ஒரே தலைமை இருக்கிறதா? இல்லை.

எனவே மே18 அன்று முள்ளிவாயக்கால் நினைவேந்தல் நிகழ்வன்று தமிழ் தேசிய பரப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை இரத்துச் செய்து சத்தியப்பிரமாணம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தின் இறுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சியினருக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

கூட்டத்தில் தீர்வு எதுவும் எட்டப்படமுடியாத நிலையில் சிவில் அமைப்புக்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பினரால் கேட்க்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கமுடியாத நிலையில் மண்டபத்தினை விட்டு வெளியேறினார்கள்.

இதனையடுத்து மீண்டும் கூட்டமானது கூட்டப்பட்டு வேலன்சுவாமியை தற்காலிக இணைப்பாளராக் கொண்டும் மாவட்டத்திற்கு ஒரு தற்காலிக இணைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்துடன் இணைந்து எதிர்கால நடவடிக்கைளை முன்னெடுப்பதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

# காரைதீவில் களைகட்டிய சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 98 வது துறவற தினம்



**( காரைதீவு நிருபர் சகா)**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்

ஏற்பாட்டில் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம் நடாத்திய

சுவாமி விபுலாநந்தரின் 98வது துறவற தின விழா சித்ரா பௌர்ணமி தினத்தில் ( 16) காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் திருமுன்னிலை அதிதியாக சிவ'ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் நந்தி கொடி ஏற்றி ஆசியுரை வழங்கினார்.

பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்

ஆன்மீக அதிதிகளாக

சிவ ஸ்ரீஇ.மகேஸ்வரக்குருக்கள்,

சிவஸ்ரீசி.சாந்தரூபன் குருக்கள்,

சிவஸ்ரீ ந.பத்மலோஜன் சர்மா,

சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா

கலந்து வேதபாராயணம் ஓதி சிறப்பித்தனர்.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட

மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக ,கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி புளொரன்ஸ் பாரதி கென்னடி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக தவிசாளர் கி.ஜெயசிறில் ,பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சைவப்புலவர் சு.துஷ்யந்தன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக சுவாமி பிறந்த இல்லத்தில் விஷேட பூசை நடைபெற்றது. பின்னர் சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து ,காவி வஸ்திரம் போர்க்கப்பட்டு ,துறவற கீதம் இசைக்கப்பட்டது.

அரங்கில் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் மேடையேறின. மாவட்ட செயலக இந்துசமய கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.




# ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது

**(எப்.முபாரக் )**




ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஞாயிற்றுகிழமை கிண்ணியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது.இருபதாம் திருத்த சட்டத்தின் பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்

ஆனால் வழங்கப்பட்டதோ தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகள்.மீண்டும் நிதி சட்டமூலம்,வரவுசெலவு திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார்கள்.நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை. ஆனால் இன்று அவர்கள் பசில் ராஜபக்சவுடன் அமைச்சுக்களுக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அவர்கள் பிரதி சபாநாயகர் வாக்களிப்பில் எதிர்கட்சிகளுடன் சேர்ந்து வாக்களிக்காவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் .

வரவு செலவு திட்டத்தின் பின்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையையே இன்னும் காணவில்லை.

இதில் தற்போது புதிதாக ஒன்று அமைச்சு பதவிகளுக்கு பேரம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்.

இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை.மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார். என்பதே உண்மை. ராஜபக்சக்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனறோ அதிபோன்றே முஸ்லிம்களை இந்த முஸ்லிம் கட்சி தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர் என தெரிவித்தார்.

# போலிஸாரின் உன்னதச் செயல்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**



உரிமையாளர் இன்றி 217000.00 ரூபாய் பணத்துடன் கீழே விழுந்து கிடந்த பணப் பையை ஒன்றினை கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அப்பணத்தை அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நுவரெலியா ஹக்கல சீதையம்மன் கோவில் வளாகத்தில் சனிக்கிழமை (16) கீழே விழுந்து கிடந்த பணப்பையை அவ்விடத்தில் கடமையில் ஈடுப்பட்டிருந்த நுவரெலியா பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தரான 71827 ஆனந்த கிரிஷான் குணரத்ன ( பதிவு இலக்கம் 71827) கண்டு பிடித்து உரிமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டதாக நுவரெலியா தலைமை பிரதான பொலிஸ் அதிகாரி பிரேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கோவில் வளாகத்தில் கிடந்த பணப்பையை அதிகாரி பார்த்தபோது அதில் ரூ.217000.00 இருந்தது பின்னர் தலைமை பொலிஸ் அதிகாரி பிரேமலால் ஹெட்டியாராச்சியின் பணிப்புரையின் பேரில் நுவரெலியா பொலிஸாரும் உத்தியோகத்தரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பிரதேசத்திலிருந்து நுவரெலியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பெண் ஒருவரின் பணப்பை என கண்டுபிடிக்கப்பட்டு அவரிடம் அதனையை கையளித்தனர்.

இந்நிலையில் குறித்த பெண்ணை தேடிபிடித்து பணத்தை ஒப்படைத்த பொலிஸ் உத்தியோகத்தரின் நேர்மையான செயலை பலரும் பாராட்டுகின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதலை முஸ்லீம் சமூகம் மீது வீண் பழி சுமத்தி ஆட்சியை கைப்பற்றியது போன்று மீண்டும் அரபு வசந்தம் என கூறி வீண் பழி சுமத்தி ஆட்சியை தக்க வைக்க முடிவு

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ் நிலை அத்தியவசிய பொருட்கள், எரிபொருள், அந்நியச் செலவாணி, டொலர் பிரச்சினை என்பன காரணமாக சாதாரண பொது மக்கள் தொடக்கம் அரச ஊழியர்கள் உட்பட அனைத்து மக்களையும் நேரடியாக பாதித்துள்ளது என முன்னால் பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார். கிண்ணியாவில் நேற்று முன்தினம் (17) அவரது இல்லத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்

இது எந்தவொரு அரசியல் பிண்ணனியும் இன்றி தொடர் மக்கள் போராட்டமாக மாறியுள்ளது.ஜனாதிபதியின் வதிவிடம் செயலகம் வரை தொடர் போராட்டமாக நடந்தேறியுள்ளது. ஈஸ்டர் தாக்குதலை ஒரு சமூகத்தின் மீது பழி சுமத்தி ஆட்சியை கைப்பற்றியது போன்று ஜனாதிபதியின் வாசஸ்தளத்தில் இடம் பெற்ற மக்கள் போராட்டத்தை அரபு வசந்தம் என அதே சமூகத்தை வீண் பழி சுமத்தி கூறி மீண்டும் ஆட்சியை தக்கவைத்த நினைத்தவர்களை பௌத்த கிறிஸ்தவ உயர் பீடங்கள் ஏனைய சமூகங்கள் முஸ்லிம் சமூகம் அப்படிப்பட்ட துரோகங்களை செய்யவில்லை என புரிந்து கொண்டனர் . சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு இந்த நாட்டில் உறுதிசெய்யப்பட்ட நிலையில் அன்று திகன அம்பாறை பேருவளை குருணாகல் போன்ற இடங்களில் இனக்கலவரத்தை உருவாக்கிய ஆட்சியாளர்களில் பொதுபல சேன போன்ற அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் போன்றோர்களுக்கும் இனவாதிகளுக்கும் இங்கு இடமில்லை என்பதை மக்கள் போராட்டம் மூலமாக சகல இனங்களும் இணைந்து ஒருமித்த நிலைப்பாட்டில் ஆட்சியாளர்களுக்கு எதிராக கோசமிட்டு மக்கள் காட்டியுள்ளார்கள்.

இந்த நாட்டின் ஸ்திரத் தன்மையை பாதுகாக்கும் பொறுப்பு ஆட்சியாளர்களுக்கும் எதிரணியினருக்கும் இருக்கிறது.இதனை கொண்டு எதிர்கட்சி அப்படி செயற்படுகிறதா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுகின்றது. மைத்திரிபால தலைமையில் 16 க்கும் மேற்பட்டவர்களும், விமல் தலைமையில் 17க்கும் மேற்பட்டவர்களும் , அநுரகுமார தலைமையில் 4 க்கும் மேற்பட்டவர்களும் சம்மந்தன் தலைமையில் 16 க்கு மேற்பட்டவர்களும், கஜேந்திரகுமார் ரணில் விக்ரமசிங்க உட்பட பல கட்சி தலைவர்கள் இருக்கிறார்கள் .அரசாங்கத்துக்கு எதிராக தற்போது மக்கள் போராட்டத்தின் போது நம்பிக்கையில்லாப் பிரேரனையை முதலிலே கொண்டுவருவது அவசியமல்ல எதிரணியின் தலைமை அனைவருடனும் பேச வேண்டும் இவ்வளவுக்கும் காரணம் அதி உச்சபீடமான நாடாளுமன்றம் .20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக அசிங்கப்படுத்தப்பட்டது 20 ஆவது சட்டம் நிறுத்தப்பட்டு 19 ஆவது சட்டம் நிலை நிறுத்தப்பட வேண்டும் . இது அனைத்து தரப்பினருடனும் கதைத்து முதற் பிரேரனையாக கொண்டு வரப்பட வேண்டும். இது மட்டுமே மறுசீரமைப்புக்கும் அரசியல் மாற்றத்திற்கும் வழி கோலும் . தனியார் துறையினரை ஊக்கப்படுத்த வேண்டும் ஏனைய நாடுகளும் இவ்வாறே முன்னேற்றமடைந்தன .விவசாயிகளுக்கு தேவையான சேதனப் பசளையை விவசாயிகளுக்கு எடுத்து கூறப்படாமையே விவசாய செய்கை தோல்வி கண்டுள்ளது.விலை ஏற்றம் காரணமாக யூரியா பசளை 1500 க்கு விற்பனை செய்த அன்று இன்று 45000 ரூபாவுக்கு செல்கிறது இதனால் விவசாயம் 85 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. டொலரின் விலையேற்றம் புதிய நாணயத்தாள்களின் உற்பத்தியும் உள்நாட்டு உற்பத்திகளின் வீழ்ச்சியும் மூல காரணமாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது.அண்மையில் 30 அமைச்சின் செயலாளர் அமைச்சர்கள் கூடி 33 ஆலோசனை களை வழங்கினார்கள் அமைச்சர்களை குறைக்க வேண்டும் இராஜாங்க அமைச்சர்களை குறைத்து இளைஞர்களின் வேலை வாய்ப்புக்களை இல்லாமல் ஆக்க வேண்டும் என்பதை கூறி விட்டு ஜனாதிபதியும் பிரதமரும் பல்வேறுபட்ட கட்சிகளின் கூட்டரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என நினைக்கிறார்கள். இது அரசியல் யாப்புக்கு முரணாணதாகும் . அமைச்சர்களை குறைக்க வேண்டும் எனக் கூறுகின்ற போது கூட்டரசாங்கம் அமைத்தால் அதிகரிக்க வேண்டியே வரும் என்ற முரண்பாடுகளை நீக்க ஆட்சியாளர்களால் மட்டுந்தான் முடியும். 19ஆவது திருத்தச் சட்டம் மூலமாக நான்கரை வருடங்கள் பாராளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது என்ற விடயத்தை நிலையாக உருவாக்கினார்கள்.ஆறு வருட ஆட்சியை ஐந்து வருடங்களாக குறைத்திருந்தார்கள் இருபது மூலமாக இரண்டரை வருடத்துக்கு தனி அதிகாரங்களை ஜனாதிபதிக்கு கொடுத்து சகல சுயாதீன குழுக்களுக்களையும் செயலற்றதாக்கி விட்டு பாராளுமன்றத்தையும் அர்த்தமற்றதாக்கி விட்டு பிரச்சினைக்கு தீர்வை நாங்கள் காண முடியாது.எதிரணியில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் பல்வேறு பட்ட கொள்கையுடையவர்கள் நாளை தங்களை நாட்டின் ஜனாதிபதியாகவோ தலைவர்களாகவோ ஆக்க நினைக்கின்ற அனைவரும் ஒரு மேசையில் ஒன்று கூட வேண்டும் அதற்கான முயற்சியில் இறங்க வேண்டும் வெறுமெனே கையொப்பம் இடுங்கள் எனக்கூறி எந்த விடயத்திலும் கையொப்பத்தை பெற்று விட முடியாது இதனை முறியடிப்பதற்கு ஆட்சியாளர்கள் பல்வேறு பட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற சாந்த பண்டார விலை போய் இருக்கின்றார்

அதே நேரத்தில் 20 க்கு கை தூக்கிய ஏழு குறிப்பாக முஸ்லிம் உறுப்பினர்களும் எட்டாவதாக ஆட்சியாளராக அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுத்திருக்கும் அதாவுல்லா போன்றவர்களும் அந்த 20 ஆவது திருத்தம் கொண்டு வந்த போது தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ மலையக சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பை கவனத்திற் கொள்ளாமல் பாராளுமன்றத்தில் அதிகாரத்தை ஒரு தனி நபருக்கு தாரைவார்த்த விடயத்தை காலி முகத்திடலிலே தாங்கள் பெற்ற தாயை சகோதரிகளை சந்திக்கு இழுக்கின்ற செயல்களை செய்தார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. இதுவே நாட்டினுடைய பிரச்சினைக்கு காரணம் 3/2 பெரும்பான்மையை ஏற்படுத்தி 20க்கு வாக்களிக்காமல் விட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

எதிர்க்கட்சியின் தலைமைக்கு கதைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்து கொண்டிருக்கிறது.முதலில் கொண்டு வாருங்கள் பாராளுமன்றத்துக்கு 20 யை ஒழிப்போம் ஜனாதிபதி முறையை நீக்குவோம் பாராளுமன்றத்துக்கும் பிரதமருக்கும் அதிகாரம் கொடுப்போம் என்ற தோரனையில் நீங்கள் வர வேண்டும் இதனை விட்டு விட்டு வெறுமெனே காலத்தை கடக்கும் நிகழ்ச்சித் திட்டமாக மாற்ற வேண்டாம். காலி முகத் திடலில் மாலையில் ஆயிரம் பேர் இருக்கும் இடத்தில் இரவில் ஒரு இலட்சத்தை தாண்டும் அளவுக்கு மக்கள் ஒன்று கூடுகின்றார்கள் என்றால் மாவட்டம் மாவட்ட ரீதியாக திரண்டு செல்கின்றார்கள் என்றால் போராட்டத்தில் இருக்கின்ற மக்களோடு போராட்டத்துக்கு வெளியே இருக்கின்ற சமூகமும் அதற்கு ஒத்துழைத்துப்பு செய்து கொண்டிருக்கிறது இதனை இந்த ஆட்சியாளர்களோ எதிரணியினரோ சரியாக உணர்ந்து கொள்ளவில்லை இதனை சரியான பாதையில் செல்வது தான் நாட்டுக்கான ஒரே தீர்வு .

கேவளமான சட்டங்களை ஆதரித்த சிறுபான்மை சமூகங்களுக்கு எந்த மூலையிலும் சாதாரண மகனும் இவர்களுக்கு ஆதரவு கொடுக்க கூடாது என்பதை தெரிவிக்கிறேன் என்றார்.

## பெருந்திரளான மக்கள் வடமிழுக்க தேரேறி வலம் வந்தார் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரப் பெருமான்






மட்டக்களப்பு மாவட்டத்தில் புகழ் பெற்ற ஆலயங்களுள் ஒன்றாகத் திகழும் மட்டக்களப்பு மாநகரில் புளியந்தீவில் அமைந்துள்ள ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்திருவிழாவானது இன்றைய தினம் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

2022.04.07ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய வருடாந்த உற்சவத்தில் கடந்த 11ம் திகதி மாம்பழத் திருவிழா, 14ம் திகதி திருவேட்டைத் திருவிழா போன்ற சிறப்பு பூசைகள் இடம் பெற்றிருந்தது.

உற்சவத்தின் 09ம் நாளான தேர்த்திருவிழாவானது பெருமளவு மக்களின் பங்கேற்புடன் வெகு சிறப்பாக இடம் பெற்றது. ஆரம்ப பூசை வழிபாடுகள், சிறப்பு வாத்திய, நாட்டிய நிகழ்வுகள், தேவார பாராயணங்கள் இடம் பெற்று விக்னேஸ்வரப் பெருமான் உள்வீதி வலம் வந்து அலங்காரத் தேரில் அமர்ந்து பக்த அடியார்களின் அரோகரா முழக்கத்துடன் வடமிழுக்க வெளிவீதி வலம் வந்து அருள் வழங்கும் காட்சி மிக அற்புதமாக இடம்பெற்றது.

## புற்று நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைகளை பெற்று வரும் 25 நபர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு




(எப்.முபாரக்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புற்று நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைகளை பெற்று வரும் 25 நபர்களுக்கான அதிகரிக்கபலபட்ட மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று (18) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.சிறீபதி தலைமையில் இக்கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இக்கொடுப்பனவு 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சுதன் உள்ளிட்டோர்கள் கலந்து கொண்டனர்.

## காரைதீவில் சித்திரை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா




(காரைதீவு நிருபர் சகா)

சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39 வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய 24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நேற்று நடைபெற்றது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டமானது கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளையாட்டு கழக காரியாலயத்தில் நிறைவு பெற்றது. மாலையில் விபுலானந்த மைதானத்தில் தலைவர் வி.அருள்குமரன் தலைமையில் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆலோசகர்களான செ.இராமகிருஸ்ணன் வே.இராஜேந்திரன் வே.த. சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

கல்வி சாதனையாளர்கள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மடத்தடியில் களைகட்டிய சித்ரா பௌர்ணமி விசேட பூசை




( காரைதீவு நிருபர் சகா)

இந்துக்களின் புனித தினமான சித்ரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சனிக்கிழமை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விஷேட பூசை மற்றும் அன்னதானம் இடம் பெற்றது.

சித்ரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சித்திர குப்தர் நாயனார் சரிதம் பாடப்பட்டது.

காரைதீவை சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் சா.கந்தசாமி ஆலையடிவேம்பைச் சேர்ந்த எஸ்.கிருபைராஜா தலைமையிலான குழுவினர் சரிதம் படித்தனர்.

12 மணிக்கு சித்ரா பௌர்ணமி விஷேட பூசை ஆலய குரு சிவசிறி ஹோவர்த்தன சர்மா தலைமையில் நடைபெற்றது.

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ் விசேட பூசையில் கலந்து கொண்டனர்.

ஆலய அறங்காவலர் சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா சித்ரா பௌர்ணமியின் சிறப்பு பற்றி உரையாற்றினார்.

தொடர்ந்து அம்மன் அன்னதான மண்டபத்தில் ஆலய தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அன்னதான வைபவம் நடைபெற்றது.

மாலையில் 4 மணியளவில் மண்டலாபிஷேக பூஜை இடம்பெற்றது

## குமுக்கனில் 210 சித்தர்களுக்கு அற்புத வேள்வி

(காரைதீவு நிருபர் சகா)

அகிலத்தை ஆளுகின்ற 210 சித்தர்களை வேண்டி கிழக்கின் தென் கோடியில் உள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் அருள் பாலிக்கும் காளியம்மனுக்கு அற்புத வேள்வி நடாத்தப்பட்டது.

சித்ரா பௌர்ணமி அன்று(16) சித்தர்களின் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் இந்த யாகம் சிறப்பாக நடைபெற்றது.

நாள் முழுவதும் நிறைவான அபூர்வ மூலிகைகளினால் ஒரு அற்புத வேள்வி, ஆயிரகணக்கில் மந்திர ஜெபம், பல மணி நேர அபிஷேகம், நிறைவான வன போஜனம் வழங்கப்பட்டது.

பூரண ஒத்துழைப்பு தந்த சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணை தலைவர் மகேஸ்வரன் சுவாமிகள், சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள், விவே, விஷோ பிரசாத், டிரோன் மற்றும் பூரண பாதுகாப்பு வழங்கிய குமண சரணாலய வனத்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# நன்றி கூறுகின்றோம்



அன்னை மடியில்
28.07.1938

இறைவனடியில்
13.04.2022

# தாந்தியான் லெட்சுமிப்பிள்ளை



எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு பாசமிகு தாயார் தாந்தியான்லெட்சுமிப்பிள்ளை கடந்த 13.04.2022 அன்று தனது 84வது வயதில் இறைபதமடைந்த செய்திகேட்டு எமது வீட்டுக்கு வந்து நேரடியாக அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி ஊடாகவும் சமுகவலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் வார்த்தைகள் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு பதாதைகளை காட்சிப்படுத்திய நிறுவனங்கள் அமைப்புக்களுக்கும் , அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும் ,மற்றும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர், 513/2 லயன்ஸ் கழக வீதி, மட்டக்களப்பு